**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP.No.171/2023**

பெயர் : நாகராஜன்

த/பெ. : நாகப்பன்

தேதி : 04.02.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 21.05.2023 ஆகும். விபத்திற்கு பின்னர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றீர்கள்ள ன்றால் சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். நான் 22.05.2023முதல் 12.06.2023 வரை சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்கு எனக்கு ஒரு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. Discharge summaryயை தாக்கல் செய்துள்ளேன் அது மசாஆ2 ஆகும். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன் ஆனால் 5 நாட்கள் கழித்துதான் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் வாகனமாமன TN 82 V 8170 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் வீரமணிக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டனர் உரிமம் இல்லை என மோட்டார் வாகன ஆய்வாளர்ஆய்வின்போது குறிப்பிடப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் மசாஆ6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் எடுத்துக்கொண்ட சிகிச்சைகள் அனைத்தும் அரசு மருத்துவமனையில் தான் எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். நான் சிகிச்சை எடுத்ததற்கான பில்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஓட்டுனர் உரிமம் இல்லாமலும், இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாமலும் அதிவேகமாகவும்,. அஜாக்கிராதையாகவும் வாகனத்தை ஓட்டி நான்தான் விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லாததால் 1ம் எதிர்மனுதாரர் காப்பீடு விதிமீறல் செய்துள்ள காரணத்தினாலும், மேற்படி வாகனம் மோட்டார் வாகன சட்டத்திருத்ததிற்கு பின்பு

விபத்தில் ஈடுபட்டதாலும் 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்காக எந்தவித நஷ்ட ஈடும் மனுதாரருக்கு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. மயிலாடுதுறை தலைமை மருத்துவமனையில் உள்ள மருத்துவக்குழு வழங்கிய ஊனச்சான்றிதழில் மாண்புமிகு உயர்நீதிமன்ற வழிகாட்டுதலையோ, அரசு ஊனச்சான்று வழங்க வறையறுத்துள்ள முறையை பின்பற்றாமலும், இணைப்புகள் இல்லாமல் கொடுக்கப்பட்டுள்ள Expt. C–1னை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சரியான முறையில் பரிசோதனை செய்யாமல் உத்தேசமாக அதிகப்படியாக எதேச்சையாக 28 சதவீதம் ஊனச்சான்றிதழ் வழங்கியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் அதிகப்படியான நஷ்ட ஈடு கோரியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வருமானம் இழப்பு மற்றும் வேலை சம்பந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல., எனக்கு எந்தவித வருமான இழப்பும் விபத்தினால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.